முதன்மை சார்பு நீதிமன்றம்,  விழுப்புரம்

**O.S No.  123/2021**

**Witness    DW  1**

**பெயர்  ராதா**

**க.பெ  முத்துசாமி**

**இன்று  (23.07.2025)  சாட்சி  சத்தியபிரமாணம்  செய்விக்கப்பட்டு  வாக்குமூலம்  பதிவு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

**யார்  வழக்கு தாக்கல் செய்துள்ளர்கள் என்றால் நான் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் , வாதி என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் ,  1    ஆம் பிரதிவாதி   நதியா என்பவர் எனது மருமகள் ,     வாதி பூபதி ஒதியத்தூர் என்றால் சரிதான் ,  என் கணவருடன் பூதூரில் வசித்து வந்தேன் என்றால் சரிதான் ,  தற்போது ஒதியத்தூரில் உள்ளேன் என்றால் சரிதான்,   10,05,1993   ல் எனது கணவர் பேரில் வழக்கு சொத்தை வாங்கினேன் என்றால் சரிதான்,  எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால்  1  ஆண் பிள்ளை  2  பெண்பிள்ளை , என் மகன் பெயர் ஆதிமூலம்,  முதல் மகன் பெயர் இருச்சம்மாள்,  2  வது மகள் பெயர் ஜோதி, என் மகன் எங்குள்ளார் என்றால் அவன் எங்கு உள்ளான் என்று எனக்கு தெரியாது , இருச்சம்மாள் இறந்துவிட்டார் ,  ஜோதி ரெட்டிகுப்பத்தில்  உயிருடன் உள்ளார் ,    பூபதி என்பவருக்கு என் சொத்தை விற்பனை செய்துள்ளேன் என்றால்  நான் தாவா சொத்தை நான் வாதி பூபதிக்கு விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரியல்ல  ,  அடமானம்தான் ஏற்படுத்திகொடுத்தேன்,  எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால்  தெரியாது,  என் மகன் படித்துள்ளாரா  என்றால்  3 ஆம் வகுப்பு படித்துள்ளார் ,ஜோதிக்கு எழுத  படிக்க  தெரியுமா என்றால் தெரியாது ,  ஜோதி கையெழுத்து போடுவாரா  என்றால்   போடுவார்  ,  நான் கையெழுத்து போடுவேனா  என்றால் போடுவேன் ,  பவுனம்மாள் என்பவர் என் மாமியார் ,**

**அவர் உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார், இறந்து போன என் மகள் இருசம்மாளுக்கு வாரிசுகள் உள்ளார்களா என்றால் 1 ஆண் 1 பெண் உள்ளார்கள், அவர்கள் என்னுடன் இல்லை தனியாக வசிக்கிறார்கள் என்றால் சரிதான், எனது கணவருக்கு தாவா சொத்து தவிற வேறு சொத்து உள்ளதா என்றால் இல்லை, தாவா சொத்தில் வீடு உள்ளதா என்றால் வீடு உள்ளது, வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது , அது என் கணவர் கட்டியவீடு என்றால் நாங்கள் இருவரும் சம்பாதித்து கட்டிய வீடு , என் கணவர் 15,10,2016 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான் , என் கணவருக்கு நான் என் மகன் மகள்கள் மற்றும் என் மாமியார் வாரிசுகள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் , இதை தவிற வேறு வாரிசு இல்லை என்றால் இல்லை,**

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கபடுகிறது.

**Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.**
**Sd/A.Tamilselvan, M.L.,**
**Principal Subordinate Judge ,**
**Villupuram**